**முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி**

நாள். 17.04.2025

Case No.GWOP.179/2021

P.W.1

**திரு. ராஜு**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். நான் காட்டன் மில்லில் வேலை செய்து வருகிறேன். என்னுடைய பணி அடையாள அட்டையை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2ம் மனுதாரர் எனது 2ம் மனைவி என்றால் சரிதான். எனக்கு மொத்தம் 6 பெண் குழந்தைகள். முதல் மனைவிக்கு 4 பெண் குழந்தைகள். எனது மகள் வெண்ணிலா EEE பட்டயப் படிப்பு படித்துள்ளார். வெண்ணிலா எனது 2வது மனைவியின் மகள் ஆவார். அதனால் அவருக்கு தாழ்வு மனப்பான்மை இருந்தது என்றால் சரிதான். எனது மகள் அவரது திருமணத்திற்கு முன்பு ஒரு தடவை தற்கொலை முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. எனது மகளுக்கு வலிப்பு நோய் இருந்ததால் திருநெல்வேலி மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரியல்ல. அவருக்கு பயந்த கோளாறு இருந்ததால் திருநெல்வேலி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அந்த சமயத்தில் அவருக்கு ஒரு தடவை வலிப்பு நோய் வந்தது. 15 நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டார். எனது மகள் வெண்ணிலாவும் முதல் எதிர்மனுதாரரும் ஒரே கம்பெனியில் வேலை பார்த்தனர் என்றால் சரிதான். இருவரும் காதலித்து வந்தனர் என்றால் சரியல்ல. அந்த விபரத்தை என்னிடம் தெரிவித்த போது நான் சம்மதிக்கவில்லை என்றால் சரியல்ல. முறையாக வீட்டிற்கு பெண் கேட்டு வந்தனர். நாங்களும் அவர்கள் வீட்டிற்கு சென்று ஒரு தடவை பார்த்தோம். நன்றாக விசாரித்த பின்பு தான் கல்யாணம் முடித்து வைத்தோம் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு முதல் எதிர்மனுதாரரை பற்றி யாரும் எந்த புகாரும் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் கிறிஸ்தவ மதத்தையும், முதல் எதிர்மனுதாரர் இந்து மதத்தையும் சார்ந்தவர் என்றால் சரிதான். அதனால் ஆரம்பத்தில் இருந்து அவர்களது திருமணத்தில் எனக்கு விருப்பமில்லை என்றால் தவறு. எனது மகள் என்னிடம் எந்த குறையும் சொல்லவில்லை என்றால்

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.04.17 15:16:52 +0530

சரியல்ல. அவர் என்னிடம் அவ்வப் போது குறை சொன்னார். எந்தெந்த தேதியில் என்ன குறை சொன்னார் என்று என்னுடைய மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகள் குறை சொன்ன போதும் முதல் எதிர்மனுதாரருக்கு நேரடியாகவோ அல்லது கைபேசி மூலமாகவோ அறிவுரை எதுவும் வழங்கியதாக எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகள் இறக்கும் போது கர்ப்பமாக இருந்தார் என்றால் சரிதான். எனது மகளுக்கும் 1வது எதிர்மனுதாரருககும் திருமண வாழ்க்கை சுமூகமாகவும், அன்பாகவும் போய்க் கொண்டிருந்தது என்றால் சரியல்ல. அடிக்கடி சண்டை வருவதாக எனது மகள் சொன்னார். நான் குடியிருக்கும் வீடு எனக்கு சொந்தமானது தான். எனக்கு என்ன வருமானம் வருகிறது என்பதை காண்பிக்கும் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகள் இறந்த பிறகு நான் 1ம் எதிர்மனுதாரரிடம் போய் பணம் கேட்டேன் என்றாலும், அவர் பணம் தர மறுத்து விட்டதால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் தவறு. நான் புகார் அளித்தததின் பேரில் எனது மகள் இறந்தது குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் பொய்யான காரணங்களை கூறி தான் புகார் அளித்தேன் என்றால் தவறு. நாங்கள் நேரடியாக போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்று தான் புகார் கொடுத்தோம். அவர்களது வீட்டிற்கு நாங்கள் போகவில்லை. முதல் எதிர்மனுதாரர் மைனர் குழந்தையை படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மைனர் குழந்தையை பண்ணம்பாறையில் உள்ள ஏவ் மரியா என்ற பள்ளியில் முதல் எதிர்மனுதாரர் படிக்க வைக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. குழந்தையை கவனிக்கும் அளவுக்கு பொருளாதார வசதி எனக்கு ஏதும் இல்லை என்றால் தவறு. நான் மாதந்தோறும் ரூ.25000/- வருமானமும், எனது மனைவிக்கு ரூ.18000லிருந்து 20000 வருமானமும் வருகிறது. அது போக எனக்கு தோட்டம் ஒன்றரை ஏக்கர் உள்ளது. அதன் தற்போதைய மதிப்பு 50, 60 லட்சமாகும். எனது வருமானத்திற்கும் எனது மனைவியின் வருமானத்திற்கும் சொத்து இருப்பதாக சொல்வதற்கும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக என்னுடைய பொருளாதார நிலைமை குறித்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொய் புகார் அளித்ததன் காரணமாக தான் 1ம் எதிர்மனுதாரர் சிறைக்கு சென்றார் என்றால் தவறு. போலீசார் விசாரித்து எனது மகள் கொலை செய்யப்பட்டார் என்று தெரிந்து தான் 1ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு போட்டேன்.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.04.17 15:17:00 +0530

தற்போது எனக்கு 5 பெண் குழந்தைகளும், அவர்கள் மூலமாக பேரக் குழந்தைகளும் இருப்பதால் எனக்கு இந்த மைனர் குழந்தையை பார்ப்பதற்கு நிதி வசதி இல்லை என்றால் தவறு. அவர்களுடன் சேர்த்து இந்த மைனர் குழந்தையையும் பார்த்துக் கொள்வதற்கு எனக்கு தாராளமாக நிதி வசதி உள்ளது. 1ம் எதிர்மனுதாரர் மைனர் குழந்தையை நல்ல முறையில் பார்த்துக் கொண்டு வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் குடிக்கும் பழக்கும் உள்ளவர் என்பதாலும், வேலைக்கு போகாமல் இருந்தார் என்பதாலும் அவரால் குழந்தையை நன்றாக வளர்க்க இயலாது. நான் தற்போது இந்த வழக்கிற்காக முதல் எதிர்மனுதாரர் மீது தவறான தகவலை சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சங்கதிகளை எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரரும் அவரது பெற்றோர்களான 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களும் குழந்தையை நல்ல முறையில் பார்த்து வருவதால் இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. என் பெண்ணை கொலை செய்து விட்ட நிலையில் அவர்கள் எப்படி குழந்தையை நன்றாக பார்த்துக் கொள்வார்கள். 1வது எதிர்மனுதாரர் தான் இயற்கை பாதுகாவலர் என்பதால் குழந்தையை நல்ல முறையில் கவனித்து வருவதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.04.17 15:17:10 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**